**வாசிக்க**: **தானியேல்** 1:9-17

**பிரித்தெடுக்கபட்ட வாழ்கையின் பலன்**

தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார். உடனே அவன் தன்னோடு இருந்த ஜெபநண்பர்களான அனனியா (சாத்ராக்), மீஷாவேல் (மேஷாக்), அசரியா(ஆபேத்நெகோ), என்பவர்களை சேர்த்துகொண்டு, அவர்களுக்காகவும் கேட்டான். பிரதானிகளின் தலைவனோ இவர்களுடைய ஆரோக்கியம் கெட்டு விடக்கூடாதே என்று பயந்தபோது, தானியேல் விசுவாசத்தோடு, பத்துநாள்வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப்பாரும். எங்களுக்குப் புசிக்கப் பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து, எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும். பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும் என்றான். அவன் அப்படியே பத்துநாட்களாக அவர்களுக்கு உணவை தந்தான்.

பத்துநாள் சென்றபின்பு, ராஜபோஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப் பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது.

இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சமார்த்தியத்தையும் கொடுத்தார். தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்.

**கேள்வி**:

மரக்கறியிலே மாமிசத்தைவிட சத்தும் ஞானமும் அதிகமுள்ளதாக அநேகர் சொல்வது உண்மையென இந்த நிகழ்ச்சி நிருபிக்கிறதா..?

**பதில்**:

தேவன் கற்றுதருகிற காரியங்களை குழப்பி உலகம் கற்றுகொள்ள கூடாது என்பதற்காக பிசாசு அனுப்பிய அநேக கருத்துக்களில் இதுவும் ஒன்று. இந்த நிகழ்ச்சியிலிருந்து தேவன் நமக்கு கூறுவது

1) தேவனுக்காக ஒருவன் வைராக்கியம் பாராட்டினால், அவனுக்காக தேவன் அவரும் வைராக்கியம் பாராட்டி எல்லார் கண்களிலும் தயை கிடைக்கபண்ணுவார்.

2) மனுஷர்களுடைய பெலன், முகக்களை அவர்கள் உண்ணும் உணவிலும், உடுக்கிற உடையிலும் இல்லை. அது தேவனுடைய பிரசன்னத்திலிருந்து வரும் அனுக்கிரகத்தில் தான் உள்ளது.

3) தேவனுக்காக பிரித்தெடுக்கபட்ட வாழ்க்கை வாழ்பவர்களுக்கு அவர் தரும் ஆசீர்வாதம் சரீரத்தில் மட்டுமல்ல, ஞானத்திலும், அறிவிலும், ஆவியிலும் உண்டு என இந்த நான்கு வாலிபர்கள் மூலம் தெரியபடுத்துகிறார்.

அருமையான தம்பி தங்கச்சி நீங்கள் படிக்கிற இருக்கிற இடத்தில் தேவனுக்காக உங்களை நீங்கள் அர்பணித்து வாழ்ந்தால் நீங்களும் இப்படியாக உயராத்தபடுவது உறுதி.

அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள், அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை. சங்கீதம் 34 :5

**ஜெபம்**

அன்பும் இரக்கமும் நிறைந்த நல்ல தகப்பனே. உலகம் எங்களை இழுத்துக் கொள்ளாவண்ணம். தேவனுக்கு பிரித்தெடுக்கப்பட்ட பிள்ளைகளாய் வாழுவோம். ஆமென்